மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

OS.No.5/2020

2024–ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 25–ம் நாள் இந்திய ஆணையுறுதி சட்டம் பிரிவு 3 மற்றும் 4–ன் படி வாதி/பிரதிவாதி என்பவரை சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கிராசியாஸ்(Dw1) | த/பெ. | : | |
| கிராமம் | : | | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | | தொழில் | :: | |

<u>நாள்.25.09.2024</u>

<u>பி.வா.சா.1</u>

**<u>குறுக்கு விசாரணை:–</u>**

வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு விபரம் எனக்கு தெரியும். வாதி மோசஸ் என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்றால் என்று எனக்கு தெரியவில்லை. வாதி போட்ட வழக்கிற்கு எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு எனது வழக்கறிஞரிடம் நான் தான் விபரம் சொன்னேன். வாதியின் தகப்பனார் இன்னாசிமுத்துவின் அண்ணன் மோட்ச ஆனந்தம் என்ன வேண்டும் என்றால் எனக்கு சித்தப்பா ஆவார். அவர்கள் இருவரும் 16.10.1956 ல் ஒரு கிரையம் வாங்கியுள்ளார்கள் அதுபற்றி எனக்குதெரியுமா என்றால் தெரியாது. அலசு அந்தோணி என்பவர் என்னுடைய தாத்தா அ.ஜெபமாலையின் தகப்பனார் ஆவார். அலசு அந்தோணிக்கு எத்தனை வாரிசுகள் என்றால் ஜெபமாலை, சந்தியா யாகப்பன், அருளானந்தம் ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள். சந்தியா யாகப்பனின் வாரிசுகள் ச.யா.ஜெபமாலை, மரிய நட்சத்திரம், மிக்கேல் சாமி ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள். அ.ஜெபமாலைக்கு யார், யார் வாரிசுகள் என்றால் மோட்ச ஆனந்தம், பரதலோமை, மரிய செல்வம், இன்னாசிமுத்து ஆகியோர் ஆவார்கள். அ.ஜெபமாலை மனைவி திரேசம்மாள் என்பவரும், அவருடைய மகள்கள் மரிய கீரிதாள், மங்களம், சந்திய அடிமை ஆகியோர்களும் வாரிசுகள் ஆவார்கள். அதில் பரதலோமை தான் எனது தகப்பனார் என்றால் சரிதான். பரதலோமைக்கு நானும், பிலோமின் சௌந்தராஜும் வாரிசுகள் என்றால் சரிதான். அ.ஜெபமாலைக்கு எத்தனை ஏக்கர் சொத்து இருந்தது என்றால் 6 ஏக்கர் 64 செண்டு இருந்தது. அதில் இரண்டு இடத்தை கிரையம் கொடுத்துவிட்டார். அ.ஜெபமாலையின் சொத்தில் வாரிசுகள் அனைவருக்கும் பங்கு உள்ளது என்றால் சரிதான் அவர்களுக்குள்ள பங்கை கிரையம் கொடுத்துவிட்டார்கள். நான் அது சம்பந்தமாக நீதிமன்றத்தில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அ.ஜெபமாலையின் வாரிசுகளில் மோட்சஆனந்தம், இன்னாசிமுத்து இவர்களுக்குள் கிடைக்கக்கூடிய பங்கில் எங்களுக்குள் எந்த பாத்தியமும் கிடையாது. 16.10.1956 ல் மோட்ச ஆனந்தமும், இன்னாசிமுத்தும் சேசு செபஸ்தியானிடம் கிரையம் வாங்கியதை எனது எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. 16.10.1956

பத்திரத்தை நான் பார்த்ததில்லை. நான் எதிர்வழக்குரையில் 12.02.1951ல் பாகப்பிரிவினை யார், யார் பெயரில் ஏற்பட்டது என்றால் ச.யா.ஜெபமாலை, மரிய நட்சத்திரம், அ.ஜெபமாலை மக்கள் பரதலோமை, மோட்ச ஆனந்தம், மரிய செல்வம் மற்றும் சேசு செபஸ்தியான், திரேசம்மாள் ஆகியோர் உள்ளனர். அதில் என்னுடைய சித்தப்பா இன்னாசிமுத்து பெயர் இல்லை என்றால் சரிதான். அந்த பாகப்பத்திரத்தில் இன்னாசிமுத்து பெயர் இல்லாததால் அந்த பாகப்பத்திரம் அவரை கட்டுப்படுத்தாது என்றால் சரிதான். சர்வே எண்.66/2ல் 1 எத்தனை செண்டில் நான் இருக்கிறேன் என்றால் நானும், 2ம் பிரதிவாதியும் மட்டும் 1 ஏக்கர் 76 1/2 செண்டில் இருந்து வருகிறோம். எனதுதகப்பனார் பரதலோமைக்கு 1 ஏக்கர் 76 1/2 செண்ட் எந்த ஆவணம் இல்லை என்றால் சரியல்ல உள்ளது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். பரதலோமைக்கு 1 ஏக்கர் 76 1/2 செண்ட் இடம் அ.ஜெபமாலை, மரிய நட்சத்திரம் ஆகியோர் எழுதிக்கொடுத்த பத்திரப்படி சொந்தம். அந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள 1923–1955 வரையுள்ள SLR நகலானது சொத்துக்கள் யார், யார் பெயரில் இருந்தது என்று சொல்லக்கூடிய ஆவணம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.6 தான் நான் தாக்கல் செய்த SLRல் என் தகப்பனார் பரதலோமை பெயர் உள்ளது மற்றும் மோட்ச ஆனந்தம் பெயர் உள்ளது என்று சொல்லியுள்ளேன். மேற்சொன்ன SLRல் இன்னாசிமுத்து, அருளப்பன், மரிய செல்வம், சந்தியா யாகப்பன் ஜெபமாலை, நல்ல சந்தியா பட்டங்கட்டி, மரிய நட்சத்திரம் என்பவர்கள் பெயரும் வருகிறது என்றால் சரிதான். 10.05.1999ம் தேதியில் ராஜன் என்பவருக்கு நான் அடமானம் வைத்தது வெறும் 10 செண்ட் என்றால் சரிதான். அந்த அடமானப்பத்திரம் நான்குமாலில் இன்னாசிமுத்து என்ற பெயர் விடுபட்டு உள்ளது என்றால் சரிதான். எனக்கு எனது தகப்பனார் பரதலோமை வழியில் உள்ள சொத்துக்களை தவிர வேறு எந்த சொத்துக்களும் கிடையாது என்றால் சரிதான். வாதி வழக்குரையில் தாவா சொத்து என்று எதை குறிப்பிட்டுள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தும், அ.ஜெபமாலை பூர்வீக வழியில் உள்ள சொத்துக்களும் தற்போது வரை பிரிவுபடாமல் உள்ளது என்றால் சரிதான், எங்கள் பெயரில் பட்டா உள்ளது. பிரிவுபடாமல் இருக்கும் சொத்தை பொறுத்து வாதி இந்த சொத்து எனக்கு பாத்தியம் என்று விளம்புகை கேட்கமுடியாது என்றால் சரிதான். பிரிவுபடாமல் இருக்கும் சொத்துக்களின் பட்டாக்களை எந்த ஆவணம் கொடுத்து வாங்கினேன் என்றால் பாகப்பிரிவினை பத்திரம் கொடுத்து வாங்கினேன். வாதி மோசஸ் தாக்கல் செய்துள்ள வழக்கில் பிரதிவாதிகள் மோசடியாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யாமல் பட்டா பெற்றுக்கொண்டு எங்கள் சொத்தை நாங்கள் அனுபவம் செய்யவிடாமல் தடையிடஞ்சல் செய்கிறார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 மூலமாக வாதி வட்டாட்சியருக்கு புகார் கொடுத்து அதன்பெயரில் வட்டாட்சியர் எங்களை விசாரணை செய்தார் என்றால் சரிதான். 14.02.2020ம் தேதி வா.சா.ஆ.3 மூலம் சொத்தில் தடையிடஞ்சல் செய்யக்கூடாது என வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றால் சரிதான். சர்வே எண்.66/2ல் எந்தெந்த உட்பிரிவுகள்

எனக்கு பாத்தியம் என்று எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் 66/1C. 66/2C1A ஆகியவை பாத்தியம் என்று சொல்லியுள்ளேன்.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.09.25 17:21:04 +0530